Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, MARCH 19, 2025

புதன்கிழமை 19, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 182 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# இறக்குமதி பால் மாவின் விலை அதிகரிப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி முதல் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை 4.7 சத வீதத்தால் அதிகரிக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதியின் விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. அதன் புதிய விலை 1,100 ரூபாவாகும்.



# ‘அஸ்வெசும’வில் திருத்தம்

2025ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் தற்போது நடைமுறையிலுள்ள அஸ்வெசும உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளை திருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (17) நடைபெற்ற அமைச்சரவையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


தொடர்ச்சி P2

# பாகிர் மாக்கார் இராஜினாமா

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து இம்தியாஸ் பாகிர் மாக்கார், செவ்வாய்க்கிழமை (18) இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தான் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியிலேயே தொடர்ந்து இருப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# “அமெரிக்க வரியால் நமக்கும் பாதிப்பு”

அமெரிக்காவால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வர்த்தக வரிக் கொள்கையால் எமது நாட்டின் ஏற்றுமதிகளுக்கு, வர்த்தகக் கொள்கைக்கு கடும் பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தகவல் தொழில்நுட்ப சேவைகள் ஏற்றுமதி துறைக்கு விதிக்கப்பட்டுள்ள 15 சதவீத வரியை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# “நேர்மையான சமூகத்தை உருவாக்க முடியாது”



குற்றங்களை தடுப்பதற்கு புதிய சட்டங்களை தயாரிப்பது குறித்து கவனம்திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் புதிய சட்டங்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பொலிஸ் அதிகாரியின் மகனுக்கு விளக்கமறியல்

செந்தூரன் பிரதீபன்



யாழில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரியின் மகன் திங்கட்கிழமை (17) அன்று நீதிமன்றத்தில் ஆஜராகிய நிலையில் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வழக்கு ஒன்றினை இல்லாது செய்வதாகக் கூறி, யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவரின் மகன் ஒருவர் 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றுள்ளார்.

இந்நிலையில், இலஞ்சம் வழங்கியவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அந்தவகையில் குறித்த பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அத்துடன் இலஞ்சம் பெற்ற நபரைக் கைது செய்யுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர், சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (17) முன்னிலையாகினார்.

இதன்போது குறித்த சந்தேகநபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# நீதி அமைச்சர் தலைமையில் குழு



“பாராளுமன்றக் குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான சட்டரீதியான அடிப்படையைக் கண்டறிந்து அந்தப் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் அரசியலமைப்புக் கட்டமைப்பினுள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் வழிகாட்டும் நோக்கில்” ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## விவசாயிகளுக்கு
# நிதி மானியத்தை வழங்க அமைச்சரவை அனுமதி



2025 சிறுபோக நெற் செய்கை விவசாயிகளுக்கும், வயல்களில் வேறு போகப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கும் நிதி மானியத்தை வழங்குவதற்கு அங்கீகாரத்தை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பட்டதாரிகளின் விவகாரத்துக்கு
# “வழக்கே தடையாக உள்ளது”

பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு இணைத்துக்கொள்ள உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கே தடையாகவுள்ளது. அடுத்த வழக்கு விசாரணையின்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கு எங்களுக்கு அனுமதி கிடைத்தால் உடனடியாக அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பிலான கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# “கடவுள் தந்த வயிறு”



“இது எனது வயிறு இதனை வெட்டி அகற்ற முடியாது. அதனைக் குறைக்க நான் முயற்சித்தாலும் அது குறையாமைக்கு நான் என்ன செய்வது. இது கடவுள் கொடுத்தது” என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையை செவ்வாய்க்கிழமை (18) எழுப்பிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, சமீபத்தில் நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்தின் போது,தன்னை ‘பதுல்லே படா’ என்று குறிப்பிட்ட கோப் உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2




# “முறைசாரா தொழிலாளர் முறையை நிறுத்துக”

இலங்கைத் தொழிலாளர்கள் செங்கொடி சங்கம், கொழும்பில் உள்ள அளுத்கடை நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. இலங்கையின் தேயிலை மற்றும் றப்பர் தோட்டத் துறைகளில் உள்ள நிறுவனங்கள், தமது செலவுகளை குறைக்கும் நோக்கங்களுக்காக முறைசாரா தொழிலாளர் முறைகளை மாற்றி நவீன தொழில்நுட்ப போக்கை செய்படுத்துவதற்கு எதிர்த்து தெரிவித்தே இப்போராட்டம் முன்னெடுத்துள்ளது.

# “நோயாளிகளின் உயிரை பணயம் வைக்காதீர்கள்”

அரசியல் நோக்கத்துடன் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கு பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது முறையற்றது. எனவே, நோயாளிகளின் உயிரைப் பணயமாக வைத்து நடத்தப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு எவரும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்று சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வேண்டுகோள் விடுத்தார்.

சுகாதார சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# மின்னல் தாக்கியதில் மூவருக்கு காயம்

ரஞ்சித் ராஜபக்ஷ, செ.தி.பெருமாள்



பத்தனை- திம்புள்ளை, ஆர்கில் தோட்டத்தில் உள்ள ஆலயத்தின் ஆலமரம் மீது மின்னல் தாக்கி மரக்கிளை முறிந்து விழுந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர். மலையகத்தில், திங்கட்கிழமை(17) பிற்பகல் இடியுடன் கூடிய கனமழை பெய்ததால், மதியம் 2.30 மணியளவில் கோவிலில் உள்ள ஆலமரத்தின் மீது மின்னல் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மின்னல் தாக்கியதில் மரம் முறிந்து விழுந்ததில், மரத்தின் ஒரு கிளை வீதியில் சென்று கொண்டிருந்த லொறியின் மீது விழுந்ததில், ஓட்டுநர் மற்றும்

தொடர்ச்சி P2

# எட்டு பொருட்களின் விலைகள் குறைப்பு



எட்டு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனியின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 277 ரூபாய் ஆகும்.

ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பு 4 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 279 ரூபாய் ஆகும்.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 162 ரூபாய் ஆகும். ரின் மீன் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 490 ரூபாய் ஆகும். அத்துடன், ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 185 ரூபாவாக உள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அமெரிக்க வரியால் நமக்கும் பாதிப்பு”

மேலும் அவர் கூறியுள்ளதாவது, தற்போதைய அரசாங்கம் ஏற்றுமதி சேவைத் துறையின் மீது 15 சதவீத வரி விதித்துள்ளது. ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கையின் மீது இது தீங்கை விளைவிக்கின்றது. இது தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அரசாங்கம் 15 சதவீத வரி விதிப்பதாகக் கூறும்போது, இதற்குப் பொறுப்பான அமைச்சர் இதற்கு எதிரான கருத்தை வெளியிட்டார். அரசாங்கத்திடம் கூட இது தொடர்பில் சரியான கொள்கையொன்று இல்லை.

15 சதவீத வரி விதிக்கப்பட்டதை மற்றுமொரு தரப்பினர் வெற்றியாக கருதுகின்றனர். ஐ.எம்.எப். 3-0 சதவீத வரி விதிப்பைப் பிறப்பிக்குமாறு கூறினாலும், அரசாங்கம் 15 சதவீத வரியைப் பிறப்பித்துள்ளது.

நமது நாட்டின் ஏற்றுமதி துறையில் வரிக் கொள்கையைத் தீர்மானிக்கும் விடயத்தைச் சர்வதேச நிதி நிறுவனத்துக்கு வழங்க முடியாது. ஐ.டி.ஏற்றுமதி துறையின் மூலம் வருமானம் ஈட்டும் தொழில்முனைவோர் பாரபட்சங்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே, இத்துறையினர் இந்த 15 சதவீத வரிவிதிப்புக்கு எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். ஆகவே, இந்த 15சதவீத வரியை உடனடியாக நீக்க வேண்டும் என்றார்.

## ‘அஸ்வெசும’வில் திருத்தம்

அஸ்வெசும (ஆறுதல்) நலன்புரி நன்மைகள் உதவி வழங்கும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ‘நிலையற்றவர்கள்’ சமூகப் பிரிவினருக்கான உதவித்தொகை கிடைக்கின்ற காலப்பகுதியை 2025.04.30 வரை நீடித்தல்

இயலாமைக்குட்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவுதொகை மற்றும் சிறுநீரக நோய்க்கான உதவி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவுதொகையை 7,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாய் வரை அதிகரித்தல் மற்றும் முதியோருக்காக வழங்கப்படும் உதவுதொகையை 3,000 ரூபாவிலிருந்து 5,000 ரூபாய் வரை அதிகரித்தல் மற்றும் குறித்த தீர்மானங்களை 2025 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தல்

இயலாமைக்குட்பட்ட நபர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் முதியோருக்கான கொடுப்பனவு மேற்குறிப்பிட்டுள்ள முன்மொழிவுகளுக்கமைய, கொடுப்பனவுக் காலப்பகுதியை 2025.12.31 வரை நீடித்தல்

2025 ஏப்ரல் மாதத்தின் பின்னர் நிலையற்றவர்கள் சமூகப் பிரிவினருக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டாலும், குறித்த குடும்பங்களிலுள்ள இயலாமைக்குட்பட்ட நபர்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் முதியோருக்கு வழங்கப்படும் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுக்கான காலப்பகுதியை 2025.12.31 வரை நீடித்தல்.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இயலாமைக்குட்பட்ட நபர்கள், சிறுநீரக நோயாளர்களின் விண்ணப்பங்கள் உயர்ந்தபட்ச வரையறையின் கீழ், உள்வாங்கி தகுதி பெறுகின்றவர்களுக்கு குறித்த கொடுப்பனவை 2025.12.31 வரை வழங்கல் ஆகும்.

## “நோயாளிகளின் உயிரை பணயம் வைக்காதீர்கள்”

அவர் மேலும் பேசுகையில், சுகாதார சேவையில் ஒரு தரப்பு வைத்தியர்கள் மற்றும் இணை சேவையாளர்கள் 24 மணிநேர பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் .

வரவு- செலவுத் திட்டத்தில் சுகாதார சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

கடந்த 6 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈட்டுவதாகக் கூறியிருந்தார்கள். சுகாதார அமைச்சின் மீதான விவாதம் நடைபெறும் போது பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது முறையற்றது.

ஆகவே, பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம் என்று அறிவுறுத்தியிருந்தேன். அதற்கமைய அன்றைய தினம் அவர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவில்லை.

சுகாதார சேவையாளர்கள் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்கள்.

அதற்கமைய சுகாதார அமைச்சின் தலையீட்டுடன் சுகாதார சேவையாளர்கள் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்றுக்கொடுத்தோம். இதற்கமைய சுகாதார சேவையாளர்கள் திங்கட்கிழமை (17) காலை நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு முன்னரே சுகாதார சேவையாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதில் உறுதியாக இருந்துள்ளனர்.

> **பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் முழு சுகாதார கட்டமைப்பும் நெருக்கடிக்குள்ளாகும். அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வழங்கப்படுவதைப் போன்று சம்பளம் வழங்க முடியாது**

பேச்சுவார்த்தை நிறைவடைந்து நிதியமைச்சில் இருந்து வெளியில் வந்தவுடன் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதாக ஊடகங்களுக்கு அறிவித்தனர்.

சுகாதார சேவையில் ஒரு தரப்பினர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் முழு சுகாதார கட்டமைப்பும் நெருக்கடிக்குள்ளாகும்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வழங்கப்படுவதைப் போன்று சம்பளம் வழங்க முடியாது.

அவ்வாறான பொருளாதாரம் இங்கில்லை. அரசாங்கம் பதவிக்கு வந்து 4 மாதங்களுக்குள் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது சாத்தியமற்றது என்றார்.

## வைத்தியசாலையில் பேயாட்டம்; மேஜர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அநாகரீகமாக நடந்துகொண்டதுடன், ஊழியர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டிய சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (18) மதியம் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய மேஜர் விடுமுறைக்காக நுவரெலியா பகுதிக்குச் சென்று, குடி போதையில் விழுந்து கிடந்த நிலையில் காயமடைந்துள்ளதுடன், பின்னர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். இதன்போது வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தன்னை அவமரியாதையாகப் பேசினார் என கூறிய மேஜர், அரை நிர்வாணமாக, அநாகரீகமான முறையில் நடந்துகொண்டு வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் ஊழியர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர செனவிரத்னவினால் நுவரெலியா பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.


மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## “கடவுள் தந்த வயிறு”

“பதுல்லே படா' என்று கோப் உறுப்பினர் குறிப்பிட்டது தெளிவாகத் தெரிகிறது, ஏனெனில் பதுளை மாவட்டத்தில் பெரிய வயிறு கொண்ட வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் இல்லை. அமைச்சர் சமந்த வித்யாரத்ன உட்பட பதுளையில் உள்ள மற்றவர்களுக்கு வயிறு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது" என்றும் சாமர சம்பத் தசநாயக்க கூறினார்.

“கோப் உறுப்பினர்களுக்கு நீங்கள் அறிவுரை வழங்க வேண்டும், கூட்டங்களின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென சொல்லிக்கொடுக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

## “பச்சை சரிவராது”



பொலிஸில் சேருவதற்கான விதிகளை சுட்டிக் காட்டும் மூத்த பொலிஸ் அதிகாரியின் காணொளியை இலங்கை பொலிஸ் வெளியிட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரி தனது உரையில், பச்சை குத்திய நபர்கள் பொலிஸ் திணைக்களத்திலோ அல்லது முப்படைகளினாலோ பணியமர்த்தப்பட மாட்டார்கள் என்று கூறுகிறார்.

“நீங்கள் இளங்கலை அல்லது முதுகலைப் பட்டம் பெற்றிருக்கலாம். ஆனால், நீங்கள் பச்சை குத்தியிருந்தால், இலங்கை பொலிஸிலோ அல்லது முப்படைகளிலோ நீங்கள் பணியமர்த்தப்பட மாட்டீர்கள். தோல் உடலின் மிகப்பெரிய உறுப்பு. உங்கள் சருமத்தை அழிப்பது நல்லதல்ல,” என்று அவர் கூறினார்.

## நீதி அமைச்சர் தலைமையில் குழு

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(19) அன்றுநடைபெற்ற கூட்டத் தொடரின்போதுசபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன இதனைதெரிவித்தார்.

2025 ஜனவரி 23ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, பாராளுமன்றக் குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான சட்டரீதியான அடிப்படையைக் கண்டறிதல் மற்றும் அந்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் அரசியலமைப்புக் கட்டமைப்பினுள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் வழிகாட்டுவதற்கும் அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷண நாணயக்காரவின் தலைமையில் மேலும் 4 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும், கடந்த சனிக்கிழமை (15) ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர் ஒஷானி உமங்கா குறித்த குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதாகவும் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷண நாணயக்காரவின் தலைமையிலான அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதி அமைச்சர் (சட்டத்தரணி) சுனில் வடகல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவீ கருணாநாயக்க, அஜித் பி.பெரேரா மற்றும் ஒஷானி உமங்கா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

## “நேர்மையான சமூகத்தை உருவாக்க முடியாது”

மேல் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி கூறினார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாமல் இலங்கையில் ஒரு நேர்மையான சமூகத்தை உருவாக்க முடியாது என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

## “வழக்கே தடையாக உள்ளது”

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரமே வேலையற்ற பட்டதாரிகளைத் தொழிலுக்கு இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். உயர்ந்தவரா குட்டையானவரா என பார்த்து நாங்கள் தொழில் வழங்குவதில்லை. அதற்கு என ஒரு முறை இருக்கிறது. அரச சேவை ஆணைக்குழு வழங்கும் தீர்மானங்களுக்கு இணங்கி, ஒரு கொள்கையின் பிரகாரமே தொழில் வழங்குகிறோம்.

தொழில் வெற்றிடம் காணப்படும் துறைகளுக்கு ஆட்களை இணைத்துக் கொள்வதற்கு போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை நடத்தியே இணைத்துக்கொள்கிறோம். தற்போது வெற்றிடமாகி இருக்கும் துறைகளுக்கு ஆட்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. தொழில் வாய்ப்புக்கள் வழங்கியும் இருக்கிறோம். 10 ஆயிரம் பேருக்குத் தொழில் வழங்கும் நடவடிக்கையை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

அத்துடன் பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு இணைத்துக்கொள்ள உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கே தடையாகவுள்ளது இது எதிர்க்கட்சியினருக்கும் தெரியும். அதனால் அவர்கள் கல்வி தொடர்பில் விடயங்களை வெளிப்படுத்தும்போது உண்மையான விடயங்களைத் தெரிவிக்க வேண்டும். அந்த வழக்கு காரணமாகவே ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியாமலுள்ளது. பாரியளவில் ஆசிரியர் வெற்றிடங்கள் தற்போதும் காணப்படுகின்றன. 25 ஆயிரம் வெற்றிடங்கள் வரை இருந்து வருகின்றன என்றார்.

## மின்னல் தாக்கியதில் மூவருக்கு காயம்

அருகிலுள்ள வீட்டின் சமையலறையில் இருந்த இரண்டு பேர் காயமடைந்தனர்.

மரம் விழுந்ததில் லொறி மற்றும் வீட்டின் சமையலறையின் ஒரு பகுதி சேதமடைந்தன.

முறிந்து விழுந்த மரத்தின் ஒரு பகுதி பாரவூர்தி மற்றும் வீட்டின் மீது விழுந்ததில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

## எட்டு பொருட்களின் விலைகள் குறைப்பு

ஒரு கிலோ கிராம் வெள்ளை கௌப்பியின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 750 ரூபாய் உள்ளது.

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 160 ரூபாய் என பதிகாகியுள்ளது.

ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூண்டின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 575 ரூபாவாகவும் காணப்படுகின்றது

## நிதி மானியத்தை வழங்க அமைச்சரவை அனுமதி

திங்கட்கிழமை (17) நடைபெற்ற அமைச்சரவையில் விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையை கருத்தில் கொண்டு இத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

* 2025 சிறுபோக நெற் செய்கை விவசாயிகளுக்கு ஹெக்ரெயார் ஒன்றுக்கு 25,000 ரூபா வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்ரெயார்களுக்கு
* காலபோகக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படுகின்ற வயல் காணிகளில் மேற்கொள்ளப்படும் வேறு போகப் பயிர்களுக்கு ஹெக்ரெயார் ஒன்றுக்கு 15,000 ரூபா வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்ரெயார்களுக்கு நிதி மானியத்தை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

## வவுனியாவில் 600 நோயாளிகள் பாதிப்பு



க.அகரன்

சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வவுனியாவில் 600க்கும் மேற்பட்ட நோயாளிகள் பாதிப்படைந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருந்தகங்கள், ஆய்வகங்கள், கதிரியக்க சேவைகள், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் சுகாதாரம், கண் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதார பகுதியினர் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வவுனியாவிலும் பணி பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக வவுனியாவில் பொது வைத்தியசாலைக்கு கெப்பிட்டிகொல்லாவ, பதவிய உட்பட தூர இடங்களில் இருந்து வரும் 600க்கு மேற்பட்ட நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பிச்சென்றதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக வவுனியா பொது வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவுக்கு 600க்கு மேற்பட்ட நோயாளர்கள் உட்பட மொத்தமாக 1,000 பேர் வரை நாளாந்தம் மருத்துவ தேவைக்காக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘உவகை’ நல்வாழ்வு மையம் திறந்து வைப்பு

வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுவுக்கு அடிமையானவர்களை முழுமையாக விடுவிக்கும் நோக்கத்துடன், புனர்வாழ்வு மையம் ஒன்று செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர். ஆர். முரளீஸ்வரன் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக திங்கட்கிழமை (17) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு முழுமையான விடுதலை, சமூக மறுவாழ்வு, உளவியல் மற்றும் மருத்துவச் சிகிச்சைகளுக்கான உதவி உட்பட குடும்பத்தினருக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி கைகொடுக்கும் மையமாக இது செயல்படவுள்ளது.

போரும் அதன் பின்னரான அரசியல் மற்றும் சமூகச் சூழலும் கிழக்கு மாகாணத்தில் மதுப் பாவனையை அதிகரித்ததன் விளைவாக சமூகப் பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கும் இச்சவாலான சூழ்நிலையில், மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வு மையம் அமைவது ஒரு முக்கியமான காலகட்டத்தின் தேவையாகும். ‘உவகை’ நல்வாழ்வு மையம் என்கிற பெயரில் இயங்கவுள்ள இந்த புனர்வாழ்வு மையம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மதுவுக்கு அடிமையானவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இது, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.


















## நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை

# “நீக்க நல்ல தருணம்”

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்கி புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இது உள்ளது என்றும், தாமதிக்காது அரசாங்கம் அதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(18) நடைபெற்ற புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் அஜித் பி பெரேராவினால் முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



ஜனாதிபதி முறைமை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதற்கு பெரும் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டன. அன்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1978இல் உருவான இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை எனக்கு கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இல்லாமல் செய்வேன் என்று கூறினார். ஆனால், 1994ஆம் ஆண்டில் நிஹால் கலப்பதி கையெழுத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை நிறுத்தினார். அது நல்ல விடயமே. 2000ஆம் ஆண்டுக்குள் நாங்கள் சிறந்த அரசியலமைப்பை உருவாக்கினாலும் அதனை நிறைவேற்ற முடியவில்லை.

இதன்பின்னர் மஹிந்த ராஜபக்ஷ இதுபற்றி கதைத்தாலும் அதனை செய்யவில்லை. ஆனால் 2015ஆம் ஆண்டில் மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிந்து அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். தனது அதிகாரத்தைக் குறைத்துக்கொண்டவராக மைத்திரிபால சிறிசேன இருந்தார்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் புதிய அரசியலமைப்பை மறுசீரமைப்பை விரைவில் செய்வோம் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் வந்து 6 மாதங்கள் ஆகிவிட்டது. பலமான அரசாங்கம் இருக்கும் நேரத்திலேயே இவ்வாறான வேலைகளைச் செய்ய முடியும். இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. இதன்படி இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும் என்றார்.

# “அரசியல் யாப்பு உருவாக்குவதற்கு கவுன்சில்”



புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகளை ஒருவருட காலத்துக்குள் நிறைவு படுத்த வேண்டும். இதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய வகையில் ‘அரசியல் யாப்பு வரைவு உருவாக்க கவுன்சில்’ ஒன்றை அமைக்க வேண்டும். இவ்விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட எம்.பி. அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

புதிய அரசியல் கலாசாரத்துக்காக நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்து, பாராளுமன்ற அரசாட்சி முறைமையை மீண்டும் உருவாக்குவதும், நிறைவேற்றுத்துறை அதிகாரமில்லாத ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தாகவும், புதிய பாராளுமன்றத் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தும் வகையில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாகத் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

மக்கள் வாக்கெடுப்புடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியாகிய நாங்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான அவசியம் தொடர்பில் ஜனாதிபதி தேர்தலிலும்,பாராளுமன்றத் தேர்தலிலும் குறிப்பிட்டோம். அதே நிலைப்பாட்டில் இன்றும் உள்ளோம். எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை என்றார்.

# மான்செஸ்டருடன் வந்தவர் சிக்கினார்

டி.கே.ஜி கபில

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 4,50,000 ரூபாய் பெறுமதியுடைய சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற ஒருவர் செவ்வாய்க்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவற்காடு பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இந்த சிகரெட்டுகளுடன் துபாயிலிருந்து குவைத் நாட்டிற்குச் சென்று, அங்கிருந்து செவ்வாய்க்கிழமை (18) அதிகாலை 03.40 மணியளவில் ஜசீரா ஏர்வேஸ் விமானம் J.-9551 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரின் பயணப் பையைச் சோதனைக்கு உட்படுத்திய போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 27,000 ‘மான்செஸ்டர்’ சிகரெட்டுகள் அடங்கிய 135 அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், புதன்கிழமை (19) நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.




# நினைவுப் பகிர்வு



மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்தின் நினைவுப் பகிர்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் புதன்கிழமை (19) மாலை 05.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நடராஜா ஜனகன், நடராஜர் காண்டீபன், தெ.மதுசூதனன் ஆகியோர் நினைவுப் பகிர்வுரையை ஆற்றவுள்ளனர்.

## கைத்துப்பாக்கி வெடித்ததில்

# பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம், காரைதீவு பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை(17) இரவு திடீரென கைத்துப்பாக்கி வெடித்ததில் நல்லதம்பி நித்தியானந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் (வயது 39) காயமடைந்த நிலையில், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழமைபோன்று கடமை நிமித்தம் துப்பாக்கியை பெற்றுக்கொள்வதற்கு ஆயுத களஞ்சியத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரிடம் பிஸ்டல் ரகத் துப்பாக்கி ஒன்றைப் பெற்றுக்கொள்ள சென்றவேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஆயுத களஞ்சியத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த கைத்துப்பாக்கியைப் பரிசீலனை செய்வதற்காக மேசையில் வைத்த நிலையில் திடீரென துப்பாக்கி தவறி வெடித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.



# மீனவர்களை தேடும் பணிகள் துரிதம்

செந்தூரன் பிரதீபன்

கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ள யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த விமலேந்திரன் ஞானராஜ் (46 வயது) , பூலோகதாசன் (54 வயது) இரு மீனவர்களையும் தேடும் நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த மீனவர்கள் காணாமல் போயுள்ள விடயம் தொடர்பில் கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள பிரதானிகளுடன் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் அவசர கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளதுடன் மீனவர்கள் தொடர்பாகத் தேடுதல் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் 3 பேர் கைது

நெடுந்தீவு அருகே தமிழக மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றனர்.

கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத் திருவிழாவினால் பாதுகாப்பு காரணங்களுக்காக ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மார்ச் 12 முதல் கடலுக்குச் செல்வதற்கு மீன்வளத்துறையினர் தடை விதித்திருந்தனர். திருவிழா நிறைவடைந்த நிலையில், திங்கட்கிழமை (17) இராமேஸ்வரம் மீனவர்கள் 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று கடலுக்குச் சென்றனர்.

இதில் கென்னடி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை இலங்கை கடற்படையினர் நெடுந்தீவு அருகே சிறை பிடித்தனர். படகுகளிலிருந்த சங்கர், அர்ஜுனன், தர்ம முனியாண்டி ஆகிய 3 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். விசைப்படகையும், 3 மீனவர்களையும்



காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் யாழ்ப்பாணம் மாவட்ட மீன்வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு செவ்வாய்க்கிழமை (18) வவுனியா சிறையில் அடைக்கப்பட உள்ளனர். கடந்த ஜனவரியிலிருந்து 20 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு 148 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலில் மூழ்கிய பாரிய படகு

பாறுக் ஷிஹான்

கல்முனை கடற்கரையில் இயந்திரம் உட்பட வலைகளுடன் கடலில் நங்கூரமிடப்பட்டு தரித்திருந்த சுமார் 65 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாரிய படகொன்று செவ்வாய்க்கிழமை(18) காலை கடலில் மூழ்கியுள்ளது.

அப்பகுதியில் வீசிய பலத்த காற்றினால் இயந்திரம் உட்பட வலைகளுடன் கடலில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். கனரக வாகனத்தின் உதவியுடன் கரையை நோக்கி இழுப்பதற்கான முயற்சிகளை அப்பகுதி மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்கரைப்பகுதில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் மூழ்கியுள்ள குறித்த படகினை மீட்பதற்கான மற்றொரு முயற்சியாக இலங்கை கடற்படையினரின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடுமையான கடலரிப்பு இடம்பெற்று வருவதுடன், படகுகளை நிறுத்தி வைக்கக் கூடிய இறங்கு துறை இன்றி பாரிய சிரமங்களை மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ‘உவகை’ நல்வாழ்வு மையத்தை விஸ்தரிப்பது அவசியம்

இன்றைய சமூகத்தில் போதைப்பொருள் பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகிறது, இதனால் பல பேரழிவுகள் ஏற்படுகின்றன. இவர்களில், இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் அதிகமாகப் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். அதுமட்டுமன்றி, மதுவுக்கும் அடிமையாகிவிடுகின்றனர். படுக்கையில் இருந்து எழும்போதே, மது அருந்துவோரும் இருக்கின்றனர்.

அவ்வாறானவர்கள், மதுவுக்கு அடிமையாகிவிடுகின்றனர். அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக மட்டக்களப்பு, செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையில். ‘உவகை’ நல்வாழ்வு ‘‘மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியை பாராட்டவேண்டும். இவ்வாறான உவகை நல்வாழ்வு மையங்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் உருவாக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்

ஆளுமைப் பண்புகளின் முறிவுதான் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகிவிடுகின்றனர். அவர்கள் மனக் கிளர்ச்சி நிறைந்த ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்துகிறார்கள். மனக் கிளர்ச்சி மிக்க ஆளுமைப் பண்புகளில் பணிகளை சரியான நேரத்தில் முடிக்காமல் இருப்பது, தள்ளிப்போடுவது, அவசர முடிவுகளை எடுப்பது, கவனம் குறைவாக இருப்பது, எளிதில் வருத்தப்படுவது, அதிகமாகப் பேசுவது மற்றும் தொடர்ந்து பதட்டமாக இருப்பது ஆகியவை அடங்கும்.

இந்த மனக் கிளர்ச்சியான ஆளுமைப் பண்புகளை இளம் வயதிலேயே அடையாளம் கண்டு ஊக்குவிக்காவிட்டால், அவர்கள் வளரும்போது தங்கள் சோகத்தையும் தனிமையையும் போக்க அதிக ஆபத்துள்ள நடத்தைகளை நாடுவார்கள். அவர்களில், போதைப்பொருள் பயன்பாடு, மது அருந்துதல், வீடியோ கேம்கள், வேகமாக வாகனம் ஓட்டுதல் மற்றும் பாடசாலைகளைத் தவிர்ப்பது போன்ற நடத்தைகளை அவர்கள் நாடுகிறார்கள்.

முதல் பிரச்சினை, பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளுடன் இதுபோன்ற கடினமான தலைப்புகளைப் பற்றி வெளிப்படையாக விவாதிக்கத் தயங்குவதாகும். மாணவர்களுக்குப் போதைப்பொருள் என்றால் என்ன?, அவற்றின் விளைவுகள் என்ன, சிலர் ஏன் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள், அவை ஏன் உலகம் முழுவதும் பரவலாக உள்ளன, அவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன என்பதைக் கற்பிக்க வேண்டும்.

பாடசாலைகளைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலின் பாதுகாப்பு குறித்து அக்கறை இல்லாதது, பாடசாலைக்கு முன்னால் உள்ள சிறிய கடைகளுக்குத் தொடர்ந்து கவனம் செலுத்தப்படாதது, பாடசாலையைச் சுற்றித் திரியும் மக்கள் மீது கவனம் செலுத்தப்படாதது.

நீங்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தால், முதலில் ஒரு சிறப்பு மனநல மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

பின்னர், அவற்றிற்கு வழிவகுத்த காரணங்களைக் கண்டறிந்து, எழுந்துள்ள மனச் சிக்கல்களைக் கண்டறிந்து, பொருத்தமான சிகிச்சைகளைத் தொடங்குவது அவசியம். அது ஒரு மனநல சிகிச்சையாக இருக்கலாம், அது ஒரு சமூக சிகிச்சையாக இருக்கலாம், அது ஒரு மருந்து சிகிச்சையாக இருக்கலாம் எனினும், அடிமையாவதற்கு முன்னர், அதனை ஆராய்ச்சி செய்யாமல் இருப்பதே சிறந்தது. அதற்கு வழிகாட்டவேண்டும் என்பதே எமது அவதானிப்பாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அல்-ஜசீராவில் ரணிலுக்கு வந்த வினை



எம்.எஸ்.எம்.ஐயூப்

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடந்த காலத்தில் பல ஜனாதிபதிகளால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் (கமிட்டிகள்) ஆகியவை நாட்டு மக்களையும் உலகத்தையும் ஏமாற்றுவதற்கு நியமிக்கப்பட்டவை என்ற கருத்து மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது. அக்கருத்து தவறென்று கூறவும் முடியாது.

அவ்வாறானதோர் ஆணைக்குழுவொன்றின் அறிக்கை இந்நாட்களில் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஈடுபாட்டுடன் பியகம பகுதியில் நடத்தி செல்லப்பட்டதாகக் கூறப்படும் பட்டலந்த சித்திரை வதை முகாம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையே அதுவாகும்.

1995ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட பட்டலந்த ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு 199ஆம் ஆண்டு அதே ஜனாதிபதியிடமே கையளிக்கப்பட்ட அவ்வறிக்கை கேட்பார் பார்ப்பாரின்றியே கடந்த 27 வருடங்களாகக் கிடப்பில் போடப்பட்டு இருந்தது. ஆயினும், கடந்த 6ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கத்தார் நாட்டுத் தலைநகர் தோஹாவைத் தளமாகக்கொண்ட அல்-ஜசீரா தொலைக்காட்சியுடன் நடத்திய நேர்காணல் ஒன்றை அடுத்தே அது இப்போது பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

1987 முதல் 1990ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சியை அடக்கும் போது, அரச படைகளும் அரச உதவி பெற்ற கொலைகார கும்பல்களும் 60,000க்கு மேற்பட்டோரைப் படுகொலை செய்ததாகக் கூறப்படுகிறது. அப்போது அப்படைகளும் கொலைக் கும்பல்களும் அவர்களில் பல்லாயிரக் கணக்கானோரை கொலை செய்யும் முன் நாட்டில் பல பகுதிகளில் நடத்திச் செல்லப்பட்ட வதை முகாம்களில் சித்திரவதை செய்ததாகவும் கூறப்படுகிறது.

அவற்றை பற்றி நூல்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன “பட்டலந்தட்ட கினிதெபுவெமு” (பட்டலந்தவுக்கு தீ வைத்தோம்) என்ற நூலை எழுதியுள்ளார். பட்டலந்த வதை முகாம் ரணிலின் மேற்பார்வையில் இயங்கியதாகவே கூறப்பட்டு வந்துள்ளது. மாத்தறையில் எலியகந்த இராணுவ முகாமில் நடந்த சம்பவங்களை அதில் சித்திரவதைக்குள்ளான ரோஹித்த முணசிங்க என்பவர் எலியகந்த வதை முகாம் என்ற பெயரிலான ஒரு நூலில் எழுதியுள்ளார்.

வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த காமிணி முத்துகுமாரண என்பவரும் பின்னர் லண்டனுக்குச் சென்று ‘மத்தகக் கிணி புபுரு’ (நினைவுத் தீப் பொறிகள்) என்று ஒரு நூலை எழுதியுள்ளார். மேலதிகமாக பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையிலும் பட்டலந்த வதை முகாமில் இடம்பெற்ற சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்ட அல்-ஜசீராவின் *Head to Head* என்ற பெயரிலான மேற்படி நேர்காணல் மிகவும் வித்தியாசமானதொன்றாகும். அதனை நடத்தும் ஊடகவியலாளர் மெஹ்தி ஹசன் மிகவும் கடுமையாக தன்னோடு உரையாடுவோரிடம் கேள்விகளைக் கேட்பார். தன் முன் இருப்பவர் ஒரு நாட்டின் தலைவரா? சாதாரண மனிதரா? என்பது அவருக்கு முக்கியமல்ல.

ரணில் விக்ரமசிங்க வழமையாக நேர்காணல்களின் போது, தன்னை விமர்சிக்கும் பாணியிலான கேள்விகள் கேட்கப்பட்டால் கேள்விக்குப் பதிலளிக்காமல் கேள்வி கேட்கும் ஊடகவியலாளரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் நடந்து கொள்வார்.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி ஜேர்மனியின் டௌச்செ வெல என்ற தொலைக்காட்சியோடு நடத்தப்பட நேர்காணலின் போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகச் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை விடுக்கும் கோரிக்கையைப் பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளரின் தேசியத்தை இழுத்துக் கடிந்து பேசினார். “உமது மேற்கத்தியக் கண்ணோட்டத்தை விட்டு விடும்” என்றும் கூறினார். உண்மையிலேயே அங்கு அவர் கோபிக்கக் கூடிய எதுவும் நடைபெறவில்லை.

மற்றொரு முறை சிங்கள பெண் ஊடகவியலாளர் ஒருவர் நீங்கள் தேசிய கலாசாரத்தை மதிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே என்று கூறினார். உடனே ரணில் மானவம்ம மன்னரை பற்றித் தெரியுமா? என்று கேட்டார். ஊடகவியலாளர் தடுமாறினார். அதன் பின்னர் ரணில் ஏதேதோ கூறி கேள்வியைத் திசை திருப்பினார்.

ஆனால் அல்-ஜசீரா நேர்காணலின் போது, அவர் ஹசனிடம் மாட்டிக்கொண்டார். ஓரிடத்தில் அவர் நீர் பிறக்கும் முன்னரே நான் அரசியலுக்கு வந்துவிட்டேன் என்று கூற, அதுவும் பிரச்சினைக்கான ஒரு காரணம் என்று சிலர் கூறலாம் என்று ஹசன் கூறினார்.

ஹசன், பட்டலந்த ஆணைக்குழுவைப் பற்றிய கேள்வியை எழுப்பிய போது, ரணில் முதலில் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றார். ஹசனிடம் ஆணைக்குழுவின் அறிக்கை இல்லை என்று நினைத்த அவர் எங்கே அறிக்கை? அறிக்கையில் உள்ளவற்றிலிருந்து கேள்வி கேளுங்கள் என்றார். ஹசன் அறிக்கையிலிருந்து முன்கூட்டியே எடுத்த குறிப்புக்களை வாசித்தார். அப்போது அவர் எங்கே? அறிக்கை என்றார்.

அறிக்கை தம்மிடம் இல்லை என்று ஹசன் கூறினால், இல்லாத அறிக்கைப் பற்றி ஏன் கேள்வி கேட்கிறீர்? என்று ஹசனை அசௌகரித்துக்குள்ளாக்குவதே அவரது நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால், பிபிசி தொலைக்காட்சியின் முன்னாள் இலங்கைக்கான நிருபர் பிரான்சஸ் ஹரிசன் அப்போது தம்மிடம் இருந்த அறிக்கை பிரதியைக் காட்டினார். பின்னர் தான் தனக்கும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அவர் கூறினார். இந்த சூடான விவாதத்தை அடுத்துத் தான் பட்டலந்த வதை முகாமைப் பற்றி பரபரப்பு ஏற்பட்டது.

ராஜபக்ஷக்கள் தமது எதிரிகள் என்று ரணில் கூறியிருந்தார். அதைப்பற்றிக் குறிப்பிட்ட ஹசன் ஆனால் நீங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டீர்கள் என்று கூறினார். அதேவேளை, ராஜபக்ஷக்களே அவரை பாராளுமன்றத்தில் வாக்களித்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள் என்றும் அவர் கூறிய போது, ரணில் விக்ரமசிங்க அதனையும் மறுக்க முயன்றார். இது போன்ற சிறுபிள்ளை தனமான சம்பவங்களும் அதில் இடம்பெற்றன.

மெஹ்தி ஹசன், நேர்காணல்களின் போது, தம்மோடு உரையாடுவோரைப் பேச விடுவதில்லை என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுக்க முடியாது. ஆனால், அவரது இந்த நேர்காணல் முறை மூலம் எவருக்கும் கேள்விகளை திசை திருப்ப அவர் இடம் கொடுப்பதில்லை. இருந்த போதும், வதை முகாம் பற்றிய குற்றச்சாட்டை ரணில் விக்ரமசிங்க ஏற்பார் என்று எவரும் முன்கூட்டியே எதிர்ப்பார்த்திருந்ததால் அது மடமையாகும். எவரும் அவ்வாறான குற்றச்சாட்டுகளை ஏற்கப் போவதில்லை.

எனினும், போரின் போது அரச படைகளின் தாக்குதல்களால் போர்க் களத்தில் மருத்துவமனைகளும் சேதமடைந்தன என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். போரில் சிக்குண்ட மக்களுக்கான உணவு வகைகளை அனுப்புவதற்குப் படையினர் தடையாக இருந்தனர் என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் பல ஊடகவியலாளர்கள் நேர்காணல்களின் போது, அரச தலைவர்கள் போன்றவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகும் வகையில் கேள்விகளை கேட்பதில்லை. கேட்டாலும் தொடர்ச்சியாகக் கேட்பதுமில்லை. ஆனால், அல்-ஜசீராவின் இந்த நேர்காணல் நிகழ்ச்சி அவ்வாறானதொன்றல்ல. எனவே, மூடி மறைக்க ஆயிரம் ஊழல்களும் குற்றங்களும் உள்ள இலங்கையின் தலைவர்கள் இவ்வாறான நேர்காணல்களில் கலந்து கொள்வது அவர்களுக்கு நல்லதல்ல.

உதாரணமாக, மஹிந்த ராஜபக்ஷ இதில் கலந்து கொண்டால் நிச்சயமாக அவரது பதவிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், போர்க் காலத்தில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரிய அளவிலான மோசடிகள் ஆகியவற்றைப் பற்றிக் கேட்கப்படலாம். ஊடகவியலாளர்களான நிமலராஜன், லசந்த விக்ரமதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், மகேஸ்வரன் ஆகியோருக்கு என்ன நடந்தது? என்றும் அவர்களுக்கு ஏன் நீதி வழங்கப்படவில்லை? என்றும் கேட்கப்படலாம். பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலைக்காக பிள்ளையானுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஏன் வாபஸ் பெற்றீர்கள் என்றும் கேட்கப்படலாம். அப்போது மஹிந்த என்ன பதில் அளிக்கப் போகின்றார்?

அதேபோல், உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுக்கு முன்னர் உங்கள் பிரதமரை ஏன்? பாதுகாப்பு கவுன்சிலில் இருந்து ஒதுக்கினீர்கள் என்று கேட்டால் மைத்திரிபால சிறிசேன என்ன கூறப் போகிறார்? அவ்வாறான தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தம் இருக்கிறது என்று சகல அமைச்சர்களினதும் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டு இருந்தும் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதிக்கு ஏன்? அதைப் பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது என்று கேட்டால் மைத்திரி என்ன கூறப் போகிறார்?

நேர்காணலொன்றின் போது, இராணுவத்திடம் சரணடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் எங்கே என்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்கப்பட்டது. அப்போதைய இராணுவத் தளபதியிடம் கேளுங்கள் என்று அவர் பதிலளித்தார். *Head to Head* நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் அவ்வாறு மழுப்பலாக பதிலளித்தால் நிச்சயமாக அவர் வறுக்கப்படுவார்.

உள்ளூரில் நேர்காணல்களின் போது, குறிப்பாக உள்ளூர் ஊடகவியலாளர்கள் இந்தத் தலைவர்களிடம் மிகவும் மென்மையான கேள்விகளையே கேட்பார்கள். அதற்குப் பாதுகாப்பு மற்றும் ஊடக ஒழுக்க நெறிகளைப் பற்றிய ஊடகவியலாளரின் அறிவு போன்றவை காரணமாகின்றன. ஆனால், அல்-ஜசீராவின் *Head to Head* வழமையான நிகழ்ச்சி போன்றவற்றில் அவர்களால் மழுப்பவோ தப்பிக்கவோ முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா? மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழு மனிதனாகி விட முடியாது. ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள், பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக! மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன்,
தனிமையில் புரள்கின்றான்.
உலகைத் தூய்மைப்படுத்த,
எந்தத் தனிமனிதனையும்
புறக்கணித்தலாகாது.
அன்பே இன்பம்!

பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தாருங்கள்



மஸ்கெலியா-சாமிமலை பிரதான வீதியில் டிசைட் சந்தியில் இருந்து கார்ட்மோர் வரையிலான 6 கி.மீ. நீளமுள்ள இந்த வீதியில் சுமார் 3 கி.மீ தூரம் பல ஆண்டுகளாக முறையான பராமரிப்பு இல்லாமல் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியுள்ளதால், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

மத்திய மாகாண நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்த வீதி, கிளெனகேரி, மொக்க மற்றும் கார்ட்மோர் தேயிலைத் தோட்டங்கள் வழியாகச் செல்லும் ஒரு முக்கிய வீதியாகும். இந்தப் பகுதியில் உள்ள 1,600 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமானோர் இந்தப் பாதை வழியாகப் பயணிக்கின்றனர். ஹட்டன் இலங்கை போக்குவரத்து சபை டிப்போவை ஒரு பேருந்து, 15 தனியார் பேருந்துகள் மற்றும் வேன்கள், கனரக வாகனங்கள் என்பன இந்தப் பாதையில் தினமும் பயணிக்கின்றன.

மௌசாகெல்லே நீர்த்தேக்கத்திற்கு பிரதானமாக நீர் வழங்கும் கார்ட்மோர் மற்றும் மாரே ஆகிய புகழ்பெற்ற நீர்வீழ்ச்சிகளைப் பார்வையிட வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், ஏராளமான பாடசாலை மாணவர்கள் இந்த சேதமடைந்த வீதி வழியாக தினமும் பயணிக்கின்றனர். ஆகையால், இந்த வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோருகின்றனர்.

- காமினி பண்டார இளங்கந்திலக

# இப்தார் நிகழ்வுகள்...

புனித ரமழான் நோன்பையொட்டி, நாட்டின் பல பிரதேசங்களில் இஸ்லாமிய மதத் தலைவர்கள் தலைமையில் இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

(தமிழ்மிரர் நிருபர்கள்)

மட்டக்களப்பில்...











மாளிகைக்காட்டில்...















ஹட்டனில்...





பொத்துவிலில்...





சாய்ந்தமருதில்...









மூதூரில்...









திருகோணமலையில்...

மல்ஹருஸ் மகா வித்தியாலயத்தில்...









மராட்டியம்

### வதந்தியால் நாக்பூரில்

# வெடித்தது கலவரம்

இஸ்லாமியர்களின் புனித நூல் எரிக்கப்பட்டதாக பரவிய வதந்தியால், நாக்பூரில் பல பகுதிகளில், திங்கட்கிழமை (17) திடீர் வன்முறை ஏற்பட்டது.

மராட்டியம் மாநிலம், சாம்பாஜி நகரில் உள்ள அவுரங்கசீப்பின் கல்லறையை அகற்ற வலியுறுத்தி, திங்கட்கிழமை(17), நாக்பூர் மகால் பகுதியில் உள்ள சத்ரபதி சிவாஜி சிலை அருகே பஜ்ரங் தள உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், இஸ்லாமியர்களின் புனித நூலான குரானை எரித்ததாக வதந்திகள் பரவின. இது குறித்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவியது. இது இஸ்லாமியர்கள் இடையே சீற்றத்தை ஏற்படுத்தியது.

இதை தொடர்ந்து மகால், கோட்வாலி, கணெஷ்பேத் மற்றும் சிதான்விஸ் பூங்கா உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான இஸ்லாமியர்கள் கூடி போராட்டம் நடத்தினர்.

இதில், சிட்னி பூங்கா மற்றும் மகால் பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், திடீரென வன்முறையில் இறங்கினர். அவர்கள் பாதுகாப்புக்கு வந்த பொலிஸார் மீது கற்களை வீசினர்.



வாகனங்களுக்கு தீ வைத்தனர். இதனால் அந்தப்பகுதியில் வன்முறை வெடித்தது.

இதையடுத்து, பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கலவரத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து கலைத்தனர். இதில் 9 பேர் காயமடைந்தனர்.

இதேபோல், கோட்வாலி மற்றும் கணேஷ்பேத் பகுதியில் வன்முறை ஏற்பட்டது.

இந்த சம்பவங்கள் காரணமாக, நாக்பூரில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இதையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, பஜ்ரங் தள நிர்வாகிகள் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர். தங்கள் ஆர்ப்பாட்டத்தில் அவுரங்கசீப்பின் உருவ பொம்மையை மட்டுமே எரித்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், வன்முறை வெடித்துள்ள நாக்பூரில் அமைதி காக்குமாறு, மராட்டிய முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, நாக்பூரில் வன்முறை வெடித்துள்ள நிலையில் அங்கு 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### இரண்டாவது போட்டியிலும்

# பாகிஸ்தானை வென்ற நியூசிலாந்து



பாகிஸ்தானுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரில், டுனெடினில் செவ்வாய்க்கிழமை(18) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: நியூசிலாந்து
பாகிஸ்தான்: 135/9 (15 ஓவ. ) (துடுப்பாட்டம்: சல்மான் அக்ஹா 46 (28), ஷடாப் கான் 26 (14), ஷகீன் ஷா அஃப்ரிடி ஆ.இ 22 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக்கப் டஃபி 2/20 [3], பென் சியர்ஸ் 2/23 [3], இஷ் சோதி 2/17 [2], ஜேம்ஸ் நீஷம் 2/26 [3])
நியூசிலாந்து: 137/5 (13.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: டிம் செய்ஃபேர்ட் 45 (22), பின் அலென் 38 (16), மிற்செல் ஹே ஆ.இ 21 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹரிஸ் றாஃப் 2/20 [3], குஷ்டில் ஷா 1/16 [3])
போட்டியின் நாயகன்: டிம் செய்ஃபேர்ட்.

மகாராஷ்டிரா


## அவுரங்கசீப் சமாதிக்கு பலத்த பாதுகாப்பு

மகாராஷ்டிராவில், முகலாய மன்னர் அவுரங்கசீப் சமாதியை அகற்றப் போவதாக இந்துத்துவா அமைப்புகள் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, அதற்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சத்ரபதி சிவாஜியின் மகன் சம்பாஜியின் வரலாறு ‘சவ்வா’ எனும் பெயரில் திரைப்படமாகி உள்ளது. இது தொடர்பான விவாதம் மகாராஷ்டிர சட்டப்பேரவையில் தற்போதைய பட்ஜெட் கூட்டத்தொடரில் எழுந்தது.

இதில், பேசிய சமாஜ்வாதி எம்எல்ஏ அபு ஹாஸ்மி, அவுரங்கசீப் நடவடிக்கையைப் பாராட்டியதுடன், அவரது புகழ் வாழ்க என கோஷமிட்டார். இதனால், மார்ச் 26ஆம் திகதி வரை பேரவை கூட்டத்தொடர் முழுவதும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து சத்ரபதி சம்பாஜி நகரில் இருக்கும் முகலாய மன்னர் அவுரங்கசீப்பின் சமாதியை அகற்ற வேண்டும் என்ற வலியுறுத்தல் மீண்டும் எழுந்தது.



இதற்கு மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸும் ஆதரவாகப் பேசினார். இந்நிலையில், இதற்காக, விஎச்பி, பஜ்ரங்தளம் சார்பில் மகாராஷ்டிராவில், திங்கட்கிழமை (17) மாநிலம் தழுவிய போராட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, அவுரங்சீப் சமாதிக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### ஐ.பி.எல்:

## மீண்டெழுமா லக்னோ சுப்பர்ஜையண்ட்ஸ்?



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) முதல் இரண்டு பருவகாலங்களிலும் தகுதிகாண் போட்டி வரை முன்னேறியிருந்தபோதும் கடந்த பருவகாலத்தில் ஏழாமிடத்தையே பெற்றிருந்தது.

அணித்தலைவர் லோகேஷ் ராகுலை அணியிலிருந்து விடுவித்த லக்னோ, றிஷப் பண்டைக் ஏலத்திலெடுத்து அணித்தலைவராக்கியிருக்கிறமையானது அவ்வணிக்கு நிச்சயம் பலத்தை வழங்கும்.

பண்டோடு, தக்க வைக்கப்பட்ட நிக்கலஸ் பூரான், அயுஷ் படோனி, ஏலமெடுக்கப்பட்ட ஷபாஸ் அஹ்மட், டேவிட் மில்லரென மத்திய வரிசை பலமானதாகக் காணப்படுகிறது. ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களாக ஏலமெடுக்கப்பட்டவர்களில் மிற்செல் மார்ஷ், ஏய்டன் மார்க்ரம் ஆகியோர் களமிறங்குவார்களென எதிர்பார்க்கப்படுவதோடு, மத்தியூ பிரட்ஸ்கேயும் குழாமில் காணப்படுகின்றனர்.



### பிரேஸில், உருகுவேவுக்கு எதிரான உலகக் கிண்ண

## தகுதிகாண் போட்டிகளில் மெஸ்ஸி இல்லை

தசைநார் உபாதை காரணமாக உருகுவே, பிரேஸிலுக்கெதிரான சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன 2026 உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டிகளுக்கான ஆர்ஜென்டீனா பயிற்சியாளர் லியனல் ஸ்கலோனியின் குழாமில் லியனல் மெஸ்ஸி இடம்பெறவில்லை.
தகுதிகாண் போட்டிகளில் 12-இல் விளையாடி 25 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்ஜென்டீனா காணப்படுகின்றது.

ஜப்பான்

# மலையேற்றத்துக்கு கட்டணம் நிர்ணயம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், பியூஜி எரிமலை அமைந்துள்ளது. நாட்டின் மிக உயரமான இந்த எரிமலை மலையேற்றத்துக்கு சிறந்த இடமாகவும் உள்ளது. இதனால் வெளிநாட்டைச் சேர்ந்த சாகச வீரர்களும் இங்கு வந்து செல்கின்றனர்.

அந்தவகையில், கடந்த ஆண்டு 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்கு மலையேற்றத்தில் ஈடுபட்டனர். இதனால், பியூஜி மலையில் மக்கள் நெரிசல் அதிகமாகக் காணப்படுகிறது.

இதன் காரணமாக, அங்கு சுற்றுச்சூழலும் வெகுவாக மாசடைந்து வருகிறது. எனவே, இதனைக் கட்டுப்படுத்த பியூஜி மலையில் ஏறுவதற்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி மலையேற்றத்தில் ஈடுபடும் சாகச வீரர்களுக்கு ரூ.2,300 கட்டணம்



நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், இணையம் மூலம் முன்பதிவு செய்வதற்கான அதிகபட்ச வரம்பையும், அந்நாட்டுச் சுற்றுச்சூழல் அமைச்சு கொண்டு வந்துள்ளது.

அமெரிக்கா

### தேநீர் சிந்தியதால்

## ஊழியருக்கு இழப்பீடு

தவறுதலாக தேநீரை சிந்தியதால் பாதிப்புக்குள்ளான ஊழியருக்கு, 50 மில்லியன் டொலர்கள் இழப்பீடு வழங்குமாறு, லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு, லொஸ் ஏஞ்சல்ஸ்-இல் உள்ள ஸ்டார்பக்ஸ் விற்பனையகத்தில் இருந்து தேநீர் விநியோகம் செய்யும் பணியில் மைக்கேல் கார்சியா என்ற ஊழியர் ஈடுபட்டிருந்தார். சம்பவத்தன்று, மைக்கேல் விநியோகம் செய்ய எடுத்துச் சென்ற தேநீர் பொதி சரியாக மூடப்படாமல் இருந்துள்ளது. இதை துளியும் எதிர்பார்க்காத மைக்கேல் அதனை வாடிக்கையாளருக்கு விநியோகம் செய்ய வாகனத்தில் எடுத்துச் சென்று கொண்டிருந்தார். அப்போது, பொதி சரியாக மூடப்படாததால் தேநீர் அவர் மீது சிந்தியது. இதில் மைக்கேல் இடுப்பின் கீழ் பகுதி தொடையின் உள் பகுதி மற்றும் ஆண்குறி உள்ளிட்டவற்றில் பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து அவர் தனக்கு நேர்ந்த கதியை நீதிமன்றத்தில் முறையிட முடிவு செய்து அதற்கான பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தார். “ஸ்டார்பக்சில் வேலை செய்யும் ஊழியர் அலட்சியமாக எரியும் சூடான பானங்களில் ஒன்றை பாதுகாக்க தவறிவிட்டார். இதனால் அது மைக்கேலுக்கு ஒப்படைக்கப்பட்ட ஒரே நொடியில் அவரின் மடியில் உடனடியாக விழுந்தது” என்று மைக்கேல் தரப்பு வழக்கறிஞரான நிக்கோலஸ் ரோவ்லி எழுத்துப்பூர்வ அறிக்கையில் தெரிவித்தார்.

### ஐ.பி.எல்:

## பழைய பாதைக்கு திரும்புமா மும்பை இந்தியஸ்?



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) சென்னை சுப்பர் கிங்ஸுடன் இணைந்து அதிக தடவைகளாக ஐந்து தடவைகள் சம்பியனாகியுள்ள மும்பை இந்தியன்ஸ் கடந்த பருவகாலத்தில் இறுதி இடத்தையே பெற்றது.

கடந்த பருவகாலத்தில் அணித்தலைவராக றோஹித் ஷர்மாவை ஹர்திக் பாண்டியா பிரதியிட்ட நிலையில் ஒவ்வொரு போட்டியிலும் அரங்கிலுள்ள, சமூகவலைத்தளங்களில் இரசிகர்களால் தூற்றப்பட்ட நிலையில் அணியில் சிக்கல் நிலவுகின்றதோ என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் அதன் பின்னர் தன்னை இரண்டு சர்வதேச கிரிக்கெட் சபை தொடர்களிலும் தன்னை பாண்டியா நிரூபித்ததுடன், வீரர்களைத் தக்க வைத்ததிலும் உள்ளகச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டது போலத் தோன்றுகின்றது.

அந்தவகையில் ஜஸ்பிரிட் பும்ரா, சூரியகுமார் யாதவ், திலக் வர்மா, நாமன் திர் என தக்க வைக்கப்பட்ட இந்திய வீரர்களே மும்பையின் பலமாகக் காணப்படுகிறது.

பும்ரா எப்போது விளையாடுவாரென தெளிவில்லாத நிலையில் மீளக் கைச்சாத்திடப்பட்ட ட்ரெண்ட் போல்ட், தீபக் சஹர் ஆகியோர் இனிங்ஸின் ஆரம்பத்தில் மட்டுமல்லாமல் இறுதி ஓவர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இஷன் கிஷன், டிம் டேவிட், நெஹால் வதேரா, அன்ஷுல் கம்போஜ் ஆகியோர் இம்முறை இல்லாத நிலையில் றயான் றிக்கெல்டன், வில் ஜக்ஸ், மிற்செல் சான்ட்னெர், றீஸ் டொப்லி ஆகியோர் அணிக்கு பலம் சேர்க்கக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 19, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.